**கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூலை 02 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 19 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோரளைப்பற்று பிரதேச சபையின் 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணம் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 ஆம் ஆண்டு நிலவிய யுத்த சூழ்நிலையின் போது ரூபா.681,000 பெறுமதியான உழவு இயந்திரம் காணாமல் போயிருந்த போதிலும் அப்பெறுமதியை ஏடுகளிலிருந்து பதிலழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

#### 1.3.3 பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நான்கு ‘ஐஸ்’ வாடி உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.112,000 தொகையான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் ஆறு வருடங்களுக்கு மேலாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுகளில் தொடர்ச்சியாக காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையிலிருந்து பெறவேண்டிய ரூபா.11,290,841 தொகையான வீதவரி பதினொரு வருடங்களுக்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அதனை அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளிலிலிருந்து பதவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதவியை வறிதாக்கிய மற்றும் இளைப்பாறிய நான்கு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடனில் அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா.96,026 தொகை 2010 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றை அவர்களின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்வுச் சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை

| விடயங்கள் | பெறுமதி<br>ரூபா | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணி கட்டிடம் | 35,936,292 | காணி உடமைப்பத்திரம் |
| பொறித்தொகுதி இயந்திரங்கள் | 441,876 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| தளபாடங்களும் பொருத்தகளும் | 1,151,262 | |
| நூல் நிலைய புத்தகங்கள் | 1,552,655 | |

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் |

| | |
|---|---|
| | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 191 | மீளாய்வாண்டில் பன்னிரெண்டு சபைக் கூட்டங்கள் நடைபெற்றிருந்த போதிலும், அக் கூட்ட அறிக்கைகளின் உறுதிப்படுத்திய பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமானம் இல 571 | ரூபா.898,894 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) சபைத் தீர்மான இல. 26 | வருமானம் அறவீடு தொடர்பாக ஐந்து உபவிதிகள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும் இன்று வரை பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி, 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.2,327,190 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.4,949,089 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.2,621,899 வீழ்ச்சியினைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | அறவீடு செய்யப்பட்டது | வித்தியாசம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | % |
| வரிகளும், வீதவரிகளும் | 3,750 | 1,966 | 1,784 | 47 |
| வாடகை | 3,300 | 2,190 | 1,110 | 33 |
| உரிமைக் கட்டணம் | 1,625 | 1,203 | 422 | 25 |
| சேவைக்கான கட்டணம் | 2,075 | 1,839 | 234 | 11 |
| ஏனைய வருமானம் | 2,725 | 2,254 | 471 | 17 |

**2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134, 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதி வரை வீத வரிகள் சபையால் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமான அறவீடு**

சுமார் 07 வருடங்களுக்கு முன்னர் சபையின் பிரதேச எல்லைக்குள் அமைக்கப்படடிருந்த 05 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக அறவிட்ட வேண்டிய ரூபா.120,000 கட்டயம் சபையால் இத்திகதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நெல்சிப் செயற்திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைகளை மேற்பார்வை செய்வதற்காக சபையினால் 2012 பெப்ரவரி 09 ஆம் திகதி ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்ட போதிலும் அவர் கடமைக்கு சமூகமளிக்காமையினால் சபை அவருக்கு சம்பளம் செலுத்தியிருக்கவில்லை. எனினும் சம்பளம் செலுத்தாமைக்காக சபைக்கு எதிரான நீதிமன்ற வழக்கில் நிலுவை சம்பளமாக ரூபா.194,163 உரியவருக்கு செலுத்த வேண்டுமென கட்டளையிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் 15 ஊழியர்கள் தொடர்பாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணத்தை உரிய திகதிகளில் செலுத்த தவறியதன் காரணமாக அந்நிதியத்திற்கு ரூபா.67,004 தொகையான மிகைக் கட்டணத்தை சபை செலுத்த வேண்டியிருந்தது. மேலும் இது தொடர்பாக நிதியத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கிற்கு ரூபா.20,218 தொகையினை சபை வழக்குச் செலவாக செலுத்தியிருந்தது.

(இ) சபைக்கு சொந்தமான 22 வாகனங்களுக்கு சுமார் 10 வருடங்களுக்கு மேலாக காப்புறுதி சபையால் இத் திகதி வரை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான சுமார் 20 மில்லியன் பெறுமதியான தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் 2010 அம் ஆண்டு காணாமல் போயிந்த போதிலும் அதற்கு பொறுப்பான நபரை இனங்கண்டு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சபை தவறிவிட்டது.

**3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையால் ரூபா.42,000 இற்கு 2014 மே 27 இல் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களை கழுவும் உயர் நீர் அழுத்தும்பம்பி பாவனை முறை தெரியாமல் பாவிக்கப்படாமல் இத்திகதி வரை களஞ்சியத்தல் பாவணையற்றுள்ளது.

(ஆ) திண்மக் கழிவகற்றலுக்காக பயன்படுத்தப்பட்ட மூன்று உழவு இயந்திரங்கள் திருத்தம் செய்யப்படாமல் மூன்று வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தாது நிறுத்திவைக்கப்படடிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 47% தொடக்கம் 86% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழ் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு